# வேள்பாரி நாவலில் காணலாகும் இனக்குழு தோற்றம்

***அ. டெய்சி***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)

***முனைவர் அ. பாக்கியமுத்து***
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

***முனைவர் ஐ. இந்திரா***
இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5048

**ஆய்வுச்சுருக்கம்**
*சங்கஇலக்கியம் தோன்றிய காலத்தில் சமூக அமைப்புகள் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. ஆனால் சமூக இயங்குதலின் காரணமாகக் காலப்போக்கில் நிலவுடைமைச் சமூகமாக மாற்றம் பெற்றுள்ளது. அதில் மனிதன் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு தன் வாழ்வியல் சூழலுக்குத் தகுந்தவாறு தொழில் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. பின்னர் அதுவே சமூக அமைப்பில் குலங்களாக உருப்பெற்றது. சங்க இலக்கியத்தில் உள்ள பாடல்கள் குலங்கள் தொடர்பான பாடல்களும் பயின்றுவந்துள்ளன. பறம்பு மலையை ஆண்டுவந்த பாரியின் குலங்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.*

## முன்னுரை

சங்க இலக்கியம் இயற்கைநெறி சார்ந்த சாதிய அமைப்புகள் வேர்கொள்ளாத தொல் பொதுவுடைமைக் கூறுகளை உடையதான ஒரு சமுதாயத்தை உருவாக்கியுள்ளது. குலங்களுக்கான அடித்தளம் சங்க இலக்கியத்தில் பிற்காலத்தில் அமைந்திருந்தது எனலாம். அவற்றில் அளவர், இடையர், இயவர், உமணர், உழவர், எயினர், கடம்பர், கம்பியர், களமர், கிளைஞர், குயவர், குறும்பர், கூத்தர், கொல்லர், கோசர், தச்சர், துடியர், புலையர், பொருநர், மழவர், வடவடுவர், வண்ணார், வணிகர், வேடர், மறவர் எனப் பல குலங்கள் காணப்படுகின்றன. இக்குலங்களுக்குள் உணவுக்கலப்போ, திருமணக்கலப்போ தடைசெய்யப்படவில்லை. ஒவ்வொரு குலத்திற்கும் தத்தம் தொழிலைச் செய்துவந்தனர். "ஒவ்வொரு குலமும் தமிழ்ச் சமுதாயத்தில் விலக்க முடியாத ஒருறுப்பாகவே செயல்பட்டு வந்தது" (தமிழக வரலாறும், மக்கள் பண்பாடும், கே.கே.பிள்ளை, ப.161) எனக் கே.கே.பிள்ளை தன்னுடைய நூலில் எடுத்துக்காட்டுகிறார்.

சங்க இலக்கியத்தில் பறம்பு நாட்டினை ஆண்டுவந்த பாரி தன்னுடைய குலங்களில் பல சிற்றரசர்கள் என்று கூறக்கூடியவர்கள் குலத் தலைவர்களாக இருந்துள்ளனர். பாரியின் குல முன்னோர் எவ்வி என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் தங்களை மன்னனாகக் கருதிக் கொள்ளாமல் ஒரு குலத்தலைவர்களாகக் கருதிவந்துள்ளனர். இவ்வாறு பாரியின் குலங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### வேளிர் குலம்

வேளிர் குலம் ஆரம்பத்தில் வேடர்குலம் என்ற குலம் முருகனைத் தலைவனாகக் கொண்டு இருந்துவந்தது. முருகனுக்கு அடுத்து எவ்வி வேடர்குலத் தலைவனாக ஏற்றபோது அவர்கள் வேளிர் என அழைக்கப்பட்டனர். எவ்வி முருகனுடன் இருந்த இடத்தைக் கடந்து மூன்று மலைகளுக்கு அப்பால் இருந்த ஆதிமலையில் ஒரு நகரினை உருவாக்கி தனது அரசாட்சியை நிறுவினார். அங்கிருந்து வேளிர்குலம் தழைத்து ஓங்கத் தொடங்கியது. வேளிர் குலத்தின் நாற்பத்தி இரண்டாவது தலைவனாகப் பாரி இருந்தான். இதனை,

“முருகனுக்குப் பின்னர் குலத்தலைவன் ஆனான் எவ்வி. கொடிக்குலமும் வேடர் குலமும் இணைந்தன. இருவரும் தங்களது இடங்களை விட்டு அகன்று மூன்றாம் மலையான ஆதி மலையை அடைந்தனர். அங்கு புது நகர் ஒன்றை அமைந்தான் எவ்வி. அதன்பிறகு அவனது வழித்தோன்றல்கள் அங்கே உருவாயின. வேளிர்குலம் தழைத்தது. அந்த வழித்தோன்றலின் தலைவன் தான் வேள்பாரி” *(பக்.57)*

மேலும், பறம்புநாடு பாரி இருக்கும் மலையின் பெயராகும். இந்த மலையின் பெயர் ஆதிமலை என்பதாகும். அந்த மலையில் தான் வேளிர் குலம் உருவானது. வேளிர்குலத்தைத் தோற்றுவித்த மாவீரன் எவ்வி என்பவன் தான் இந்நகரை உருவாக்கினான். ஆதிமலையில் தனத மக்களை பாதுகாத்து வந்தபோதிலும் இவர்கள் குலத் தலைவர்களாக இருந்து வந்தனர். மன்னர்களாக தங்களை எண்ணிக்கொள்ளவில்லை. இதனை,

“பாரி என்பவன் அரசன் அல்லன் வேளிர்குலத் தலைவன், நாட்டை ஆள்வதைப் போல காடும் ஆளப்படுகிறது என நீங்கள் நினைக்கலாம். ஆனால் காட்டை யாராலும் ஆள முடியாது. காட்டைப் பாருங்கள். எண்ணிலடங்கா உயிர்கள் உள்ளன. ஒவ்வொரு உயிரும் அளவில்லா ஆற்றல் உடையது” *(வேள்பாரி, பக்.21-22)*

என்ற கூற்றின்வழி பறம்புமலையில் வாழும் வேளிர்குலத் தலைவன் பாரியைக் காண அழைத்துச் செல்லும் கபிலரிடம் வேளிர்குலத்தைப் பற்றிக் கூறுகிறான் நீலன்.

மேலும், பண்டைத் தமிழர்கள் தெய்வ நம்பிக்கை கொண்டிருந்தனர். இறைவனின் மீது கொண்டிருந்த பயமும் தாங்கள் எடுத்துக் கொண்ட காரியம் அடுத்து முடிய வேண்டும் என்ற எண்ணமும் பக்திக்கு காரணிகளாகின்றன. சிவன், முருகன், திருமால், கொற்றவை, திருமகள், இந்திரன், வருணன், காமன் சாமன், பிரமன், பலராமன், சூரியன் முதலானவர்களைத் தெய்வங்களாகக் கொண்டு வணங்கியதைச் சங்க இலக்கியங்கள் பல பாடல்களில் எடுத்துரைக்கப்படுகின்றது.

### இனக்குழு மக்களின் செல்வம்

ஆரம்ப காலகட்டத்தில் இனக்குழு மக்களின் மிகப்பெரும் செல்வமாகக் கருதப்பட்டது கால்நடைகள் ஆகும். ஆகவே குழுக்கள் தங்களிடையே உள்ள ஆநிரைகளை அதிகப் படுத்த எண்ணினார்கள். அதன் பொருட்டு பிற குழுக்களின் ஆநிரைகளை இரவோடு இரவாகக் கவர்ந்து வருதல், சண்டையிட்டு கவர்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டனர். இதனை,

"ஆரம்பகாலத்தில் மனிதனுக்குத் தேவையான பெருஞ்செல்வமாகக் கால்நடைகளே இருந்தன. எனவே கால்நடைகளை அதிகப்படுத்தவே எல்லாக் குலங்களும் ஆசைப்பட்டன. அடுத்த இனக்குழுவின் கால்நடைகள் இரவோடு இரவாகக் களவாடப்பட்டன. களவு கொடுத்தவன் ஆயுதங்களோடு குறுக்கே பாய்ந்தான். ஓட்டிச்செல்லப்படும் கால்நடைக்கும், மீட்டுத்திரும்பும் கால்நடைக்கும் இடையில் எண்ணிலடங்கா மனிதன் செத்துவிழுந்தான்" (வேள்பாரி, பக்.027)

என்ற கூற்றால் இனக்குழு மக்களின் மிகப்பெருஞ்செல்வமாகக் கருதப்பட்ட ஆநிரைகளை கவர்தலை சுட்டுகிறார் ஆசிரியர். இதனையே சங்க இலக்கியத்தில் ஆநிரைகளை கவர்தலை பல பாடல்களில் காணமுடிகின்றது.

சங்ககால மக்கள் கால்நடைகளின் பெருமையை நன்கு உணர்ந்திருந்தனர். சமுதாய வளமையைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாகக் கால்நடைகளின் எண்ணிக்கை இருந்து வந்துள்ளது. கால்நடை வளர்ப்பு ஆண்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தாலும், பால்கரத்தல் முதல், பால்படுபொருள்களைப் பண்டமாற்றுதல் வரை பிற செயல்பாடுகள் பெண்களிடம் காணப்படுகிறது. கால்நடைகளை மூலதனமாககக் கொண்டு குடும்பத்தையும், சமூகத்தையும் மேம்படுத் தியுள்ளனர். கால்நடை பெருகவேண்டும் என்பதை,

**"புலரி விடியல் பகடுபல வாழ்த்தி"**

**(புறம். பா.எ.125)**

என்று புறநானூற்றுப் பாடல் சுட்டுகின்றது. மேலும், ஆநிரைகளைக் கவர்ந்து வருகின்றனர். கூட்டமாகச் சென்று இரவுப் பொழுதில் கவர்ந்து வந்த ஆநிரைகளை, பொழுது புலரும் முன் பகிர்ந்தளித்தான். இதனை,

**"வெண்கோள் தோன்றாக் குழிசியொடு**
**நாள் உறை மத்து ஒலி கேளா தோனே"**
**(புறம்.பா.எ.254)**

என்ற பாடல் மூலம் அறியமுடிகின்றது.

**வேந்தர்கள்**

குலத் தலைவர்களாக இருந்தவர்கள் செல்வத்தையும், அடிமைகளையும் பெருக்கிக் கொண்டே தங்களை வேந்தர்களாக அறிவித்தனர். வேந்தர்களுக்கென்று தனித்த அடையாளங்கள் மற்றும் பொருட்களை உருவாக்கினர். மணிமகுடம், முரசு, வெண்கொற்றக் குடை, ஆணைச்சக்கரம் போன்றவை வேந்தர்களுக்கான அடையாளங்களாக அமைந்தன. இதனை,

"மேலேறியவர்கள் தாங்கள் இனிக் குலத்தலைவர்கள் அல்ல, வேந்தர்கள் என்று அறிவித்தனர். வம்ப வேந்தர்கள் வாழ்க வாழ்க என்ற முழக்கம் மூன்றில் இரு பங்கு நிலப் பகுதிகளில் ஒலித்தது. வேந்தர்களுக்கென்று தனித்த அடையாளங்களைச் சான்றோர்கள் உருவாக்கினர். மணிமுடி, அரசுமுரசு, சக்கரம், வெண்கொற்றக்குடை ஆகியவை வேந்தர்களுக்கு உரியன"

(வேள்பாரி, பக்.30)

என்று வேந்தர் குலத்திற்குரிய அடையாளங்களைத் தெரிவித்தனர்.

**பாணர்கள்**

பாணர்கள் என்ற குலமே சிற்றரசர்களின் புகழைப் பல்வேறு இடங்களில் சென்று பரப்பிய பெருமைக்கு உரியவர்கள் ஆவர். பாணர்கள் தங்கள் வறுமைநிலை காரணமாக ஏதேனும் ஒரு குலத் தலைவனைச் சந்தித்து தங்கள் வறுமையை தீர்வதற்காகத் தங்கள் திறமையை வெளிக்காட்டுகின்றனர். மகிழ்ந்த குலத்தலைவன் மிகுதியான பொருட்களை அவர்களுக்குப் பரிசிலாகக் கொடுத்து அவர்கள் வறுமை தீர வழிவகுக்கிறான். நாடோடிகளாக வாழ்க்கை நடத்தும் பாணர்கள் தாங்கள் செல்லும் இடங்களிலெல்லாம் தாங்கள் பரிசில் பெற்ற குலத்தலைவனின் சிறப்பை விதந்து ஓதி பாடல் பாடுகின்றனர். இதன்மூலம் அவர்களின் புகழ் யாவராலும் அறிய முடிகின்றது. இதனை,

"குலத்தலைவர்களும் சிற்றரசர்களும் பாணர் சமூகத்தை அரவணைத்து அள்ளித் தந்தனர். அவர்ளின் ஆற்றலையும் வள்ளல் தன்மையையும் பாணர்கள் விடாமல் பாடினர். இந்த வறிய கலைஞர்களின் வற்றாத குரல் தமிழ்நிலம் எங்கும் மிதந்து கொண்டே இருந்தது" (வேள்பாரி, பக்.30) என்று எடுத்துக்காட்டுவதை அறியமுடிகின்றது. இதேபோன்று, பாணர்களின் நிலையினையும் சங்க இலக்கிய நற்றிணையில் சுட்டும்போது, பாணர்கள் இசையில் சிறந்து விளங்கினர். இவர்கள் சிறுபாணர், பெரும்பாணர் எனப் பிரிவுகள் உண்டு. ஐவகை நிலத்திற்கும் உரிய யாழை இசைத்துள்ளனர். ஐவகை மக்களின் வாழ்வியலோடு நெருக்கமான தொடர்புடையவர்களாகவும் இருந்துள்ளனர். பிறப்பு முதல் இறப்புவரை உள்ள நிகழ்வுகளில் பாணர்களின் பங்களிப்பு இருந்துள்ளது. இதனை,

> **"பெரும்பாண் காவல் பூண்டென ஒருசார்**
> **திருந்திழை விரிந்த அறுவை மெல்லணைப்**
> **புனிறுநாறு செவிலியோடு புதல்வன் துஞ்ச.." (நற். பா.எ.40)**

என்ற பாடலில், பாணர்கள் சூழநின்று காவல் காத்திருந்தனர். இவ்வேளையில் தலைவன் மகனைப் காத்தபடி நன்னிமித்தமாகச் சூழ்ந்து நிற்கின்றனர் எனப் பாணர்கள் மகப்பேறு நிகழ்ச்சியில் நன்னிமித்தமாகக் கலந்து கொண்டதைக் காட்டுகின்றது. மேலும்,

> **"தண்ணந் துறைவன் தூதொடும் வந்த**
> **பயன்தெரி பனுவற் பைதீர் பாண"**
> **(நற்.பா.எ.167)**

என்னும் பாடலில், பாணர்கள் அறிவு கூர்மையோடு ஒரு பண்பட்ட தூதுவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை இதன்வழி அறியமுடிகின்றது.

## முடிவுரை

இவ்வாறாக, வேள்பாரி நாவலில் உள்ள இனக்குழுக்களில் பாரியின் வேளிர்குலம் மிகப்பெருமையாகக்கருதப்பட்டது. பறம்பு மலையில் உள்ள பாரியின் வேளிர்குலம் தவிர மற்ற இனக்குழுக்கள் அங்கு இருந்ததில்லை என்பதை அறியமுடிகின்றது. பொதுவாக ஒரு இனக்குழு இருக்கும் இடத்தில் மற்றொரு இனக்குழு இருப்பதிற்கு வாய்ப்பில்லை என்று அறியமுடிகின்றது. இனக்குழு தோற்றத்தில் வேளிர்குலம் இனக்குழு வேள்பாரி நாவலில் இடம்பெற்றுள்ளதையும், இனக்குழுவின் தலைவர்கள் வேந்தர்களே ஆவர், அவர்களின் துணைவர்களாக பாணர்கள் இருந்துள்ளதையும் இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.

## துணைநூற்பட்டியல்

1. வீரயுகநாயகன் வேள்பாரி - சு. வெங்கடேசன் - தொகுதி 1, 2 - விகடன் பிரசுரம், சென்னை, முதற்பதிப்பு 2018
2. சங்க இலக்கியம் தெளிவுரை - ச.வே.சுப்பிரமணியன் - மணிவாசகர் பதிப்பகம், சென்னை - முதற்பதிப்பு 2006
3. பாரி மகளிர் (காவியம்) விளக்கமுடன் - கவிஞர் மாதப்பன் - அவ்வை பதிப்பகம், தருமபுரி - முதற்பதிப்பு 2005
4. நற்றிணை ஆய்வுக்கோவை - பேரா. இரா. ஜெகதீசன் - சங்க இலக்கிய ஆய்வு மையம், மதுரை - முதற்பதிப்பு 2005